
சைவ மன்றம்

உ
சிவமயம்

World Saiva Council (Australia) Inc.
Love is God


# சிட்னி முருகன் சைவநெறி மாநாடு
# SYDNEY MURUGAN SAIVANERI CONFERENCE



## சிறப்பு மலர்

2014, ஆகஸ்ட் 29, 30, 31
சிட்னி முருகன் கோயில் வளாகம்

வெளியீடு : சைவ மன்றம் – உலக சைவப்பேரவை – அவுஸ்திரேலியா

# குமாரதந்திரத்தின் அமைப்பும் சிறப்பும்

திரு. ச. பத்மநாபன்,

## அறிமுகம்

குமரக்கடவுளாகிய சுப்ரமண்யரை வழிபடும் மரபு கௌமாரம் ஆகும். கௌமார வழிபாட்டிற்கு மூலகாரணமாக அமைவது மூலசிவாகமங்களும் உபாகமங்களும் ஆகும். குமரக்கடவுளுக்குரிய வழிபாட்டினைச் சிறப்பாகக் கூறும் ஓர் உபாகமம் 'குமார தந்திரம்' எனும் நூல் ஆகும்.

## சிவாகமம்

சிவனால் அருளிச் செய்யப்பட்ட நூல்கள் சிவாகமங்கள் ஆகும். இச்சிவாகமங்கள் மூலசிவாகமங்கள் உபாகமங்கள் என வகைப்படுத்தப் படுகின்றன. மூலசிவாகமங்கள் இருபத்தெட்டாகும். அவையாவன: காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்ஷ்மம், ஸஹஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம், விஜயம், நிஸ்வாசம், ஸ்வாயம்புவம், ஆக்னேயம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம், ப்ரோத்கீதம், இலலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம் ஆகியன ஆகும். உபாகமங்கள் இருநூற்றேழு என ஒவ்வொரு மூலசிவாகமங்களுக்கும் உபாகமங்கள் உண்டு. மூலசிவாகமங்கள் சிவனது சதாசிவ வடிவத்திலிருந்து ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் எனும் ஐந்து முகங்களிலிருந்தும் சிவகணங்களும் ருத்ரகணங்களும் உபதேசிக்கப்பட்ட சிறப்புடையன. உபதேசச் சிறப்பினால் இச்சிவாகமங்கள் சிவபேதம், ருத்ரபேதம் என வகைப்படுத்தப்படுகின்றன.

## சிவாகமங்களின் அமைப்பும், பதிப்பு முயற்சிகளும்

சிவாகமங்கள் நான்கு பாதங்களாகப் பகுக்கப் பட்டுள்ளன. அவையாவன: சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும். சைவநாற்பாதங்களிற் கிரியை மரபு சிறப்புப்பெறுகின்றது. இக்கிரியை மரபில் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் எனும் நான்கு பிரிவுகள் காணப்படுகின்றன. சிறப்பாகச் சிவாகமங்களின் சரியா கிரியாபாதங்கள் திருக்கோயில் அமைப்பு முதல் கிரியைகளினைக் கூறிநிற்கின்றன. யோக ஞான பாதங்கள் யோக முறைகளையும் ஞான பாதம் வித்தியா பாதம் என சைவசித்தாந்த தத்துவத்தையும் விபரித்து நிற்கின்றன. ஒவ்வொரு சிவாகமங்களும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்களையும் உள்ளடக்கியது எனக்கூறப்படினும் உபதேசக்கிரமத்தின் பல்வேறு பகுதிகள் அழிந்தொழிந்து கிடைக்காது போயின. சிவாகமங்களின் பதிப்பு முயற்சியில் 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலே ஆரம்பமாகின. அவ்வகையில் சென்னை சித்தாரிப்பேட்டை கோ. சண்முகசுந்தர முதலியாரின் பங்கும் பணியும் மகத்தானது. அவரது முயற்சியைத்தொடர்ந்து தேவகோட்டை சைவாகம பரிபாலன மடம், தென்னிந்திய அர்ச்சகர் சங்கம் ஆகியன பதிப்பு முயற்சியில் ஈடுபட்டன. பாண்டிச்சேரி பிரெஞ்ச் இந்தியவியல் ஆய்வு நிறுவனம் சிவாகமங்களை அழிந்து போகாது பாதுகாக்கவும் ஆராய்ச்சிப்பதிப்பாகவும் பதிப்பிற்கும் முயற்சியிலும் ஈடுபட்டது.

## சிவாகம மரபில் சுப்ரம்மண்ய வழிபாடு

இம்மரபில் சிவனைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடும் மரபிற்கேற்ப சுப்ரம்மண்யக் கடவுளை வழிபடுவதற்குரிய திருக்கோயில் அமைப்பு பரிவார ஆலயங்கள் பரிவாரத் தெய்வங்கள் மூர்த்திபேதங்கள் லட்சணங்கள் நித்திய நைமித்திய காமிக பூஜை முறைகள் உற்சவம் பிராயச்சித்தம் முதலானவை ஆங்காங்கு கூறப்படும் சிறப்புடையனவாகக் காணப்படுகின்றன. அதன்வழி சுப்ரமண்யஸ்தாபன விதியினை அஜிதம் க்ரி.15, காமிகம் 2. 64, காரணம் 2. 93, தீப்தம் 15, வீரம் 75, சந்தானசம்கிதை 28, சுப்ரபேதம் 1. 44 ஆகிய சிவாகமங்கள் கூறிநிற்கின்றன. இவ்வரிசையில் சுப்ரமணிய வழிபாடு முருக வழிபாடு குமார வழிபாடு எனப் பல்வேறு பெயர்பெறுவனவாகின்றன. பல்வேறு மரபுகள் ஒன்றுபடுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## குமாரதந்திரம்

மூலசிவாகமம் இருபத்தெட்டினுள் இருபத்திரெண்டாவதாக அமைவது லலிதாகமம். இவ்வாகமத்திற்கு உபாகமங்கள் மூன்று. அவையாவன லலிதம் லலிதோத்திரம், குமாரதந்திரம் ஆகியனவாகும். இவ்வகையில் லலிதாகமத்தின் மூன்றாவது உபாகமமாக அமைவதே குமாரதந்திரம் எனும் உபாகமம் ஆகும்.

## குமாரதந்திரப்பதிப்புகள்

குமாரதந்திரம் எனும் உபாகமம் மூன்று பதிப்புக்களை உடையது. முதற்பதிப்பு சம்ஸ்கிருதத்தின் கிரந்தலிபியில் கோ.சண்முகசுந்தர முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது. பின்னர் தென்னிந்திய அர்ச்சகர் சங்கத்தினரால் 1974ல் தேவநாகரிலிபியில் பதிக்கப்பட்டது. இவ் இரண்டு பதிப்புக்களும் மூலநூற்பதிப்புக்களே ஆகும். 2003ல் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் வெளியீடாக அல்லூர் சிவஸ்ரீ விஸ்வநாத சிவாச்சாரியாரின் தமிழ் மொழிபெயர்ப்புடன் மூலநூல் வெளிவந்துள்ளது.

## ஆகமம் தந்திரம் பெயர்விளக்கம்:

இந்துசமய வழிபாட்டு மரபில் சைவ வைஷ்ணவ, சாக்தமரபுகளின் பிரமாண நூல்கள் முறையே சைவ ஆகமங்கள், வைஷ்ணவ சம்ஹிதைகள், சாக்த தந்திரங்கள் என்று வகைப்படுத்தப்படுகின்றன.

சிவாகமங்கள் ஆ, க, ம என்பதில் 'வந்தது' எனப்பொருள்தருவதாகக் கொள்ளப்படுகின்றது. மேலும், ஆ - என்பது பசுவையும், க - என்பது பாசத்தையும், ம - என்பது பதியையும் குறிப்பது என்றும், ஆ - ஞானம், க - மோஷம், ம - மல, ந - சனம் எனினும் பொருள்தருவதாக ஆகமம் கொள்ளப்படுகின்றது. செவி வழியாக உபதேசகிரமமரபில் மரபு தவறாது வந்த சிறப்பு சிவாகமங்கள் சிவனிடமிருந்து வந்தது என்பது மிகுந்த விரிந்த பொருள்தருவதாக அமைகின்றது.

சிவாகமங்களின் தோற்றம்பற்றி சிவாகமங்களே தந்திராவதாரபடலத்தில் கூறுகின்றன. இதன்வழி சிவாகமங்களுக்கு தந்திரம் எனும் பெயரும் பொருத்தமுடையதாகின்றது. இது 'தன்னை அடைந்தோரைக் காப்பது' என்று பொருள் கொள்ளப்படுகின்றது.

இதற்கு மேலாக சிவாகமங்கள் மஹாதந்திரங்கள் என்னும் பெயர் பெறுகின்றன. இதற்கு நான்கு பாதங்களுடன் கூடியது மஹாதந்திரம் ஆகிறது. அத்தோடு சம்ஹிதை எனும் பெயரும் சிவாகமங்களுக்கு அழைக்கப்படுவது மனங்கொள்ளத்தக்கது. இதற்கு 'பௌஷ்கர சம்ஹிதை' தக்க உதாரணமாகும்.

சிவாகமங்களின் பொருள்மரபுகள் மிகவிரிவாக ஆய்வுகொள்ளத்தக்க விடயப்பரப்பாகும்.

## குமாரதந்திரத்தின் அமைப்பு

ஸ்ரீமத்குமாரதந்திரம் எனும் உபாகமம் 51 அக்ஷரங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் 51 படலங்களாக தந்திராவதார படலம் முதல் சாயரக்ஷவிதி படலம் வரையாக அமைந்துள்ளது. தந்திராவதார படலத்தில் பரமசிவனிடத்தில் கௌசிகமுனிவரின் வினாவுக்கு விடையளிக்கும் வகையில் இவ்வுபாகமம் அமைந்துள்ளது. படலம் என முடியும் விடயங்கள் பகுத்துக் கூறப்பட்டுள்ளமை மனங் கொள்ளத்தக்கது. பெரும்பாலும் விதிப்படலம் என்றே அமைவதும் நோக்குதற்குரியது.

ஸ்ரீமத் காரணாகமத்திற்கு மேலும் விளக்கமளிக்கும் வகையில் இவ்வுபாகமம் முருக வழிபாட்டிற்கென்றே கூறப்படுகின்றமை சிறப்பான விடயமாகும். (கு.த 1.7-9) குமார தந்திரம் எதற்காகக் கூறப்பட்டது என விளக்குகையில் :

***"அரசன் அரசு விருத்தியடையும் பொருட்டு நித்யம், நைமித்யம், காம்யம் என மூவகைப்பட்டதான பூஜைகள் உடையதாக இப்பொழுது குமாரதந்திரம் கூறப்படுகின்றது".*** (கு.த.1. 10) எனத் தெளிவு படுத்துகின்றது. மேலும் "குமாரதந்திரோக்த மார்கேணைவ குஹம் யஜேத் "முருகனைக் குமாரதந்திர விதிப்படியே வழிபட வேண்டுமென குமாரதந்திரம் கூறுகிறது.(கு.த.1. 11)

இதன்படி நோக்குகையில் முறையே:

1. தந்திராவதாரபடலம் (24)
2. மந்திரோத்தார விதி (77)
3. சௌசாசமனவிதிபடலம் (20)
4. ஸ்நாநானுஷ்டான விதி படலம் (35)
5. நித்ய பூஜாவிதிபடலம் (111)
6. நைவேத்ய விதி படலம் (46)
7. அக்னிகார்யவிதி படலம் (47)
8. நித்யோத்சவ விதிபடலம் (28)
9. குண்டல க்ஷணவிதிபடலம் (18)
10. மண்டலவிதி படலம் (08)
11. குணதீக்ஷா விதி படலம் (16)
12. ஸ்நபன விதி படலம் (222)
13. ஸ்கந்தோற்சவவிதிபடலம் (388)
14. பிராயச்சித்தவிதிபடலம் (193)
15. ஜீர்ணோத்தாரவிதிபடலம் (87)
16. வாஸ்துஹோமவிதிபடலம் (28)
17. சாந்திஹோம விதிபடலம் (9)
18. திசாஹோமவிதிபடலம் (7)
19. மூர்த்திஹோமவிதிபடலம் (10)
20. பஞ்சகவிய விதிபடலம் (21)
21. பஞ்சாம்ருத விதிபடலம் (21)
22. பாலஸ்தாபன விதிபடலம் (38)
23. சம்புரோக்ஷணவிதி படலம் (72)
24. பிரதிமாலக்ஷணவிதி படலம் (179)
25. சூலஸ்தான விதி படலம் (179)
26. அசலஸ்தாபன விதி படலம் (205)
27. சலபேரபிரதிஷ்டாவிதி படலம் (105)
28. சக்த்யஸ்திர ஸ்தாபனவிதிபடலம் (74)
29. கர்பந்யாசவிதி படலம் (38)
30. ஆத்யேஸ்டிகாவிதி படலம் (14)
31. பிராஸாதலக்ஷணவிதி படலம் (61)
32. மூர்த்திநேஷ்டிகாவிதி படலம் (37)
33. ப்ராகாரலக்ஷணவிதி படலம் (33)
34. பரிவாரவிதி படலம் (52)
35. கரணலக்ஷண விதி படலம் (274)
36. பாதுகாப்ரோக்ஷண விதி படலம் (24)
37. ஆத்மார்த்த யஜனவிதிபடலம் (74)
38. தைலாபிஷேக விதி படலம் (27)
39. மாஸ பூஜா விதி படலம் (377)
40. அங்குரார்ப்பண விதி படலம் (39)
41. மகாவள்ளிதேவசேனாஸ்தாபன விதிபடலம் (79)
42. சுமிந்ர ஸ்தாபன விதி படலம் (34)
43. கஜஸ்தாபன விதி படலம் (23)
44. ரதபிரதிஷ்டா விதி படலம் (72)
45. மகாபிசேக விதி படலம் (39)

46. ஸ்கந்தகலாந்யாச விதி படலம் (30)
47. மாத்ருகாந்யாஸ விதி படலம் (19)
48. சுப்ரம்மண்ய கவச விதி படலம் (17)
49. பிரதக்ஷிணநமஸ்காரவிதி படலம் (13)
50. ஆசார்யலக்ஷண விதி படலம் (17)
51. சாயரக்ஷா விதி படலம் (24)

என்பனவாகும்.

எல்லாமாக 3483 சுலோகங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் தந்திவதார படலத்தில் குறிப்பிட்ட பள்ளியறைப் பூஜை மூலநூல்கனில் இடம்பெறாமை குறிப்பிடத்தக்கது.(கு.த 1.24)

## குமாரதந்திர வழிபாட்டு முறை

குமாரதந்திர முறைப்படியான ஆலய அமைப்பில் மூலவராக விளங்கும் சிறப்பு சுப்ரமண்ய வடிவமேயாகும். ஏனைய வடிவங்கள் சுப்ரமண்ய மூர்த்திபேதங்களாக 16 வகையில் பேசப்படுகின்றன. சண்முகரது வடிவம் கையிலேந்திய ஆயுதங்களின் வேறுபாட்டில் ஏழுவிதமாக வகைப்படுத்தப் படுகின்றது. சுப்ரமணிய வழிபாட்டு முறையில் மூலசிவாகமங்களில் வழங்கப்பட்டதான பூஜை முறைகள் அடித்தளமானவையும் அத்திவாரமானவையும் ஆகும். "சிவாகமங்களில் மந்திரபேதங்கள் காணப்படும். க்ரியாபோதங்கள் காணப்படமாட்டாது. இந்நூலில் கூறப்படாதவற்றை 28 மூல சிவாகமங்களில் கூறப்பட்டனவற்றிலிருந்து அறிவாளியானவன் பெற்றுக்கொள்ள வேண்டும்". (கு.த.1.25) எனத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

சிவாகமங்களின் பயன்படுத்தப்படும் சொற்பதங்கள் கலைச்சொற்களாகவே அமைகின்றன. அவை சிறப்பானதும் தனித்துவமானதும் ஆழமானதுமான கருத்தாடலைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றமை மனங்கொள்ளத் தக்கது. இதன்வழி உதாரணமாக சுப்ரமண்யரின் மூர்த்திபேத தியானங்கள் 2ம் படலத்திலும் பிரதிமாலட்சணம் 24ம் படலத்திலும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சுப்ரமண்யாலயத்தின் வழிபடத்தக்க பரிவாரங்கள் தனித்துவமானவை (கு.த.34), அதன்படி 8, 16, 32 பரிவாரங்கள் கூறப்படுகின்றன. சுப்ரமண்யரது வாகனமாக மயில் அல்லது யானை இடம்பெறுவதும், யானை முக்கியத்துவம் பெறுவதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

சுப்ரமண்ய ஆலய நித்தியபூஜை வழிபாடு பல்வேறு பலன்களை அளிக்கவல்லது. அது பற்றி நோக்குகையில் :

*"எல்லா சித்திகளைக் கொடுக்கக் கூடியதும் எல்லா நோய்களையும் அழிக்கவல்லதும் எல்லாத் துன்பங்களை நீக்கக்கூடியதும் எப்பொழுதும் வெற்றியைத் தரக்கூடியதும் சுப்ரம்மண்ய நித்ய பூஜை ஆகும்."* (கு.த.5.1இ2)

## முடிவுரை:

இவ்வாறாக சுப்ரமண்யப் பெருமானுக்குரிய தனித்துவமிக்க வழிபாட்டு நூலாகவும் உபாகமமாகவும் விளங்கும் குமாரதந்திரம் இன்றளவில் முருகனது படைக்கலமாகிய வேல் வழிபாட்டினை மேற்கொள்ளும் ஆலயங்களிலும் முக்கியத்துவமும் செல்வாக்கும் பெறுகின்ற ஓர் நூலாக விளங்கும் அதேவேளை கந்தபுராண மரபுக்கு வழிகோலும் சுப்ரமண்ய மூர்த்திபேத வடிவம் அழகின் வடிவமாக வழிபடப்பெற்று வரும் சிறப்பு ஆகியன மிக விரிந்த விடயப்பரப்புக்களை தனித்துவமிக்க வழிபாட்டு மரபாகக் கொள்ளும் வகையில் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## உசாத்துணை நூல்கள்


1. காரணாகமம், (பூர்வம்), (1899), கோ.ஷண்முகசுந்தர முதலியார் (பதி.),சென்னை.
2. .............., (உத்தரம்), (1899), கோ.ஷண்முகசுந்தர முதலியார் (பதி.),சென்னை.
3. குமாரதந்திரம், (1974), நு.கந்தசாமி சர்மா (பதி.), தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை.
4. .............., (2003), அல்லூர் வை.விச்வநாத சிவாச்சாரியார் (பதி.) (தமிழ்மொழிபெயர்ப்புடன், அருள்மிகு ஸ்ரீ தண்டாயுதபாணி திருக்கோயில், பழனி (வெளி).
5. ஸ்ரீதத்துவநிதி (1823), சகம் மும்பாய்.
6. கதிரவேற்பிள்ளை, நா., (1960), சுப்பிரமணிய பராக்கிரமம், சென்னை.
7. கைலாசநாதக்குருக்கள், கா., (1963), சைவத்திருக்கோயில் கிரியைநெறி, இந்துகலாவிருத்திச்சங்கம், கொழும்பு.
8. சபாரத்தின சிவாச்சாரியார், ( ), சைவாகமங்கள் - ஓர் அறிமுகம், சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம், சென்னை.
9. Kailasanatha Kurukkal,K, 'Á Study of the Karthikeya – Cult as Reflected in the Epics and Puranas', University of Ceylon Review, Vol.XIX, No.2, Oct.1961.



திரு. ச. பத்மநாபன்,
விரிவுரையாளர், சம்ஸ்கிருதத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.